இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 88 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 22 – சனிக்கிழமை 08 நவம்பர் 2025 – சென்னை 24 + 4 பக்கங்கள் Established:10.8.1942 - Volume:84 - Issue 88: Thiruvalluvar Year - 2056 - Ayppasi 22 - Saturday 08 November 2025 - Chennai 24 + 4 Pages ₹ 5.00

## தமிழ்நாட்டின் ஜனநாயகத்தைக் காக்கும் காவலர்களாக, கழகத்தின் ‘பூத்’ ஏஜெண்டுகள் செயல்படுவீர் !

# S.I.R. பணிகள் தொடக்கம் : வருமுன் காப்பதே நமது கடமையாக இருக்க வேண்டும்!

## செங்குன்றம் இரா.ஏ.பாபு இல்ல மணவிழா வாழ்த்துரையில் - கழகத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

**சென்னை, நவ.8-**


**சென்னை - அண்ணா அறிவாலயம் - கலைஞர் அரங்கில், நேற்று (7.11.2025) நடைபெற்ற செங்குன்றம் பேரூராட்சி மன்றத்தின் முன்னாள் துணைப் பெருந் தலைவர் இரா.ஏ. பாபு அவர்கள் இல்லத் திருமணவிழாவுக்குத் தலைமையேற்று, நடத்திவைத்து மணமக்களை வாழ்த்தி, கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகையில், “தமிழ்நாட்டின் ஜனநாயகத்தைக் காக்கும் காவலர்களாக, கழகத்தின் ‘பூத்’ ஏஜெண்டுகள் செயல்பட வேண்டும்!” என்றும், “சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகள் (S.I.R.) தொடங்கியுள்ளது. இவ்வேளையில் வருமுன் காப்பதே நமது கடமையாக இருக்க வேண்டும்!” என்றும் வேண்டுகோள் விடுத்தார்.**

மணவிழாவில் கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

நம் நினைவில் வாழும் செங்குன்றம் மிசா ஏழுமலை அவர்கள் இல்லத்தில் நடைபெறும் திருமண விழா; நம்முடைய ஏழுமலை அவர்களின் பேரனும், நம்முடைய அருமைச் சகோதரர் பாபு அவர்களுடைய மகனுமான திலீபன் பாபுவுக்கும் - கௌதமி பிரபாவுக்கும் நடைபெறும் இந்த மணவிழா நிகழ்ச்சியில் உங்களோடு சேர்ந்து நானும் பங்கேற்று மணவிழாவை நடத்தி வைத்து அதேநேரத்தில் மணமக்களை வாழ்த்தும் சிறப்பான வாய்ப்பினைப் பெற்றமைக்கு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமைப்படுகிறேன்!

**எதற்கும் அஞ்சாத – கழகத் தொண்டர்களின் தியாகம்!**

ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் மிகப் பெரிய போராட்டம், நெருக்கடி நிலைக் காலம். அந்த நெருக்கடி நிலைக் காலத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் சந்தித்த தியாகங்கள்; தலைவர்களில் இருந்து தொண்டர்கள் வரை பல்வேறு கொடுமைகளை அனுபவித்து, அந்த தியாகங்களை எல்லாம் ஏற்றுக்கொண்டு, அவர்கள் பட்டிருக்கும் கஷ்டங்கள் நஷ்டங்கள் இதெல்லாம் வரலாற்றில் தெளிவாகப் பதிந்திருக்கக் கூடியவை. அப்படி வரலாற்றில் பதிவாகியிருக்கக்கூடிய வகையில், எதற்கும் அஞ்சாமல் - எந்தத் தியாகத்திற்கும் தயாராக இருக்கக் கூடியவர்களாகத்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் இருந்திருக்கிறார்கள். அதனால் தான் இன்றைக்கும் கம்பீரமாக நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் பீடுநடை போட்டுக் கொண்டிருக்கிறது.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (7.11.2025) சென்னை, அண்ணா அறிவாலயம், கலைஞர் அரங்கில் நடைபெற்ற, செங்குன்றம் மிசா ஏழுமலை அவர்களின் பேரனும், பாபு – திருமதி கலைவாணி தம்பதியரின் மகனுமான திலீபன்பாபு மற்றும் செல்வகுமார் – திருமதி பர்வதவர்த்தினி தம்பதியரின் மகள் கௌதமி பிரபா ஆகியோரது திருமணவிழாவை தலைமையேற்று நடத்திவைத்து, மணமக்களை வாழ்த்தினார். இம்மணவிழாவில், அமைச்சர் எஸ்.எம். நாசர், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.சுதர்சனம், ஆர்.டி.சேகர், இ.பரந்தாமன், க.கணபதி, துரை.சந்திரசேகர், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், தலைமை நிலைய அலுவலக செயலாளர் பூச்சி எஸ். முருகன், கழக நிருவாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

**மிசா ஏழுமலை – நெருக்கடி நிலைக் காலத்தில் கைதான வரலாறு!**

அதற்கு அடையாளமாக விளங்கியவர் தான், நம்முடைய செங்குன்றம் ஏழுமலை அவர்கள். ஓராண்டு காலம் மிசா என்ற கொடுமையான சட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த 500-க்கும் மேற்பட்டவர்கள் கைதாகிச் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருந்த நேரத்தில், நம்முடைய மிசா ஏழுமலை அவர் களும் கைது செய்யப்பட்டு எங்களோடு சென்னைச் சிறைச்சாலையில் இருந்தவர்.

> **“இன்றைக்கு யார் யாரோ கிளம்பி, இந்தக் கழகத்தை அழித்து விடலாம்; ஒழித்து விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறார்களே, அவர்கள் கனவெல்லாம் நிச்சயம் பலிக்காது, எந்தக் கொம்பனாலும் இந்த இயக்கத்தைத் தொட்டுக் கூட பார்க்க முடியாது என்பதை மாத்திரம் இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுக் காட்ட கடமைப்பட்டிருக்கிறேன்.”**

அவர் ஏன் மிசா சட்டத்தில் கைதாகி உள்ளே வந்தார் என்று கேட்டால், மிசா என்ற அந்தக் கொடுமையான சட்டம் தமிழ்நாட்டில் பாய்ச்சப்பட்டு, நம்முடைய ஆட்சி கவிழ்க்கப்பட்டு, அதைத் தொடர்ந்து திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கும் முன்னோடிகள் எல்லாம் கைது செய்யப்பட்டு, தமிழ்நாட்டில் இருக்கும் பல்வேறு சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருந்த காலகட்டத்தில், சிறையில் இருப்பவர்கள் யார் யார் என்பதைப் பற்றி கூட, பத்திரிகைகளில் எழுத முடியாத - தொலைக்காட்சிகளில் சொல்ல முடியாத - வெளியில் செய்தியை வெளியிட முடியாத வகையில், அன்றைக்குக் கடுமையான சட்டங்கள் எல்லாம் இருந்தன. அது மட்டுமல்ல, கட்சியில் இருக்கும் தலைவர்கள் யாரும் பொதுக் கூட்டத்தில் பேசக்கூடாது; வெளியில் சென்று பேசக்கூடாது; திருமணத்திற்குச் சென்றால்கூட அரசியல் பேசக்கூடாது என்ற நிலை எல்லாம் இருந்த நேரம். தலைவர் கலைஞர் அவர்களுக்குப் பேசுவதற்குக் கூட இடம் கொடுக்கக் கூடாது என்று அன்றைக்குப் பல கொடுமைகள் எல்லாம் சட்டமாக இயற்றி வைத்திருந்தார்கள். அந்த நேரத்தில் நம்முடைய செங்குன்றம் பகுதியைச் சார்ந்த நம்முடைய மிசா ஏழுமலை அவர்கள் உடனடியாக, “தலைவர் கலைஞர் அவர்கள் நம்முடைய பகுதிக்கு வருவதாக இருந்தால், என்னுடைய ரைஸ் மில்லை நான் தருகிறேன்” என்று சொன்னபோது, நம்முடைய தோழர்கள் எல்லாம் சொல்லி இருக்கிறார்கள், “நீங்கள் தந்தால் உங்களுக்குப் பல கொடுமைகள் ஏற்படும்; உங்கள் மீது வழக்கு வரும்; நீங்கள் கைது செய்யப்படுவீர்கள்” என்றெல்லாம் கூட எச்சரித்திருக்கிறார்கள். ஆனால் அதைப்பற்றி எல்லாம் கவலைப்படாமல், எந்தக் கொடுமை வந்தாலும் சரி; கைது செய்யப்பட்டாலும் சரி, நான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு இடம் கொடுப்பேன் என்று சொல்லி, அந்த ரைஸ் மில்லை அன்றைக்குத் துணிச்சலாக தந்தார்கள். அவ்வாறு தந்த காரணத்தால், இரண்டு, மூன்று நாட்களுக்குப் பிறகு அவர் மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு, சென்னை சிறையில் இருக்கும் எங்களோடு அவரைக் கொண்டு வந்து அடைத்தார்கள். இதுபோன்ற பல செய்திகள் உண்டு.

**கலைஞரை அழைத்து கூட்டம் நடத்தியதற்காக சீர்காழி குமாரசாமி கைது!**

அதேபோல, சீர்காழியில் குமாரசாமி என்கிற ஒரு கடை வியாபாரி. அவர் கட்சியில் எந்தப் பொறுப்பிலும் கிடையாது. ஆனால் கட்சியின் அனுதாபியாக இருந்தவர். அவரையும் மிசா சட்டத்தில் கைது செய்து உள்ளே அடைத்தார்கள். எதற்கு என்று கேட்டால், எவ்வாறு ஏழுமலை கைது செய்யப்பட்டாரோ, அதேபோல அவரும் சீர்காழியில் தலைவர் கலைஞர் அவர்கள் பேசுவதற்கு இடம் கொடுத்த காரணத்தினால், இடம் கொடுத்த காரணத்திற்காக மட்டுமல்ல; வீட்டிற்கு அழைத்து மதிய உணவு வழங்கிய காரணத்தால், கைது செய்து சிறையில் அடைத்தார்கள்.

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

---

### எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக தி.மு.க. வழக்கு!

## நவம்பர் 11-ல் விசாரணை !

### உச்சநீதிமன்றம் அறிவிப்பு!

புதுடெல்லி, நவ. 8 -

பீகாரைத் தொடர்ந்து இரண்டாம் கட்டமாக தமிழ்நாடு, கேரளா, மேற்கு வங்கம் உள்ளிட்ட 12 மாநிலங்களில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தத்தை தேர்தல் ஆணையம் மேற்கொண்டுள்ளது.

S.I.R.க்கு தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ள நிலையில், வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தத்துக்கு எதிராக, உச்சநீதி மன்றத்தில் தி.மு.க. வழக்குத்தொடர்ந்துள்ளது.

தி.மு.க. சார்பில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உச்சநீதி மன்றத்தில் இந்த வழக்கை தொடர்ந்துள்ளார்.

அதில், பீகாரில் சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தம் செய்தபோது பல்வேறு குளறுபடிகள் நடந்துள்ளது. அதற்கு எதிரான வழக்கில் இறுதி உத்தரவை உச்சநீதிமன்றம் இன்னும் பிறப்பிக்கவில்லை. இந்த சூழலில் தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர். பணிகளை மேற்கொள்வது ஜனநாயகத்திற்கு எதிரானது என்று மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சட்டம் தந்த அதிகாரங்களை மீறி தேர்தல் ஆணையம் செயல்படுகிறது, தகுதி உள்ளவர்கள் நீக்கப்படுவதற்கும், தகுதியற்றோர் சேர்க்கப்படுவதற்கும் ஏதுவான வகையில் இந்த நடைமுறை அமைந்துள்ளது என்றும் மனுவில் கூறப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தேர்தல் நடக்க சில மாதங்களே உள்ள நிலையிலும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வு மேற்கொள்வது பல்வேறு சிக்கல்களை உருவாக்கும், லட்சக்கணக்கான தமிழ்நாடு வாக்காளர்கள் தங்களது வாக்குரிமையை இழக்கும் அபாயம் ஏற்படும் என்றும் மனுவில் தி.மு.க. சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே, S.I.R. பணியை தேர்தல் ஆணையம் கைவிட உத்தரவிட வேண்டும் என்று மனுவில் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில், இந்த வழக்கை அவசரமாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வழக்கறிஞர் விவேக்சிங் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வில் நேற்று முறையீடு செய்தார்.

இதனை தொடர்ந்து, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த அறிவிப்பை ரத்து செய்யக் கோரி தி.மு.க. சார்பில் தொடரப்பட்ட வழக்கு வரும் 11 ஆம் தேதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என, உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி பி.ஆர். கவாய் அறிவித்துள்ளார்.

---

### இந்தியாவில்

## வாக்குத் திருட்டு மூலம் தேர்தல் முடிவுகளை மாற்றும் வேலை நடக்கிறது!

### மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றச் சாட்டு!

புதுடெல்லி, நவ. 8 -

இந்தியாவில் வாக்குத் திருட்டு மூலம், தேர்தல் முடிவுகளை மாற்றும் வேலை நடந்து கொண்டிருப்பதாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி குற்றம்சாட்டி உள்ளார்.

தேர்தல் ஆணையம் மூலம் பா.ஜ.க. அரசு வாக்கு திருட்டில் ஈடுபட்டு வருவதாக ஆதாரங்களுடன் குற்றம் சாட்டி வரும் ராகுல் காந்தி, அதுகுறித்து தொடர்ந்து பேசிவருகிறார்.



இந்த நிலையில், டெல்லியில் செய்தியாளரிடம் பேசிய அவர், வாக்கு திருட்டு மூலம், தேர்தல் முடிவுகளை மாற்றும் சுனாவ் சோரி நடப்பதாக குற்றம் சாட்டி உள்ளார்.

ஒருவருக்கு ஒரு வாக்கு என்பதை அரசியல் சாசனம் வலியுறுத்துகிறது என்றும், ஆனால், அதன்மீது பா.ஜ.க.வும், தேர்தல் ஆணையமும் தாக்குதல் நடத்துவதாக ராகுல்காந்தி சாடியுள்ளார். அரியானா தேர்தலில் ஒருவருக்கு ஒரு வாக்கு என்பதற்குப் பதிலாக, ஒருவருக்கு பல வாக்குகள் அளிக்கப்பட்டதாக குற்றம் சாட்டிய ராகுல்காந்தி,

அரியானாவில் மாநில மக்களின் வாக்குகள், மொத்த விற்பனைக்கு பறிபோய்விட்டதாக தெரிவித்தார்.

புகைப்படம், பெயர், முகவரி ஆகியவற்றின் போலித் தன்மை குறித்து ஆதாரங்களுடன் விளக்கம் அளித்தாலும், அதை தேர்தல் ஆணையமும், பா.ஜ.க.வும் சமாளிப்பதாக சாடியுள்ள ராகுல்காந்தி, இந்த முறைகேடுகளுக்கு சிறிய உதாரணம், பிரேசில் பெண்ணின் புகைப்படம் இந்திய வாக்காளர் பட்டியலில் இடம்பிடித்தது குறித்த தகவல்தான் என்றும் ராகுல்காந்தி சுட்டிக்காட்டி உள்ளார்.